செ. கு. எண்: 077 நாள்: 27.05.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 27.5.2018

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை மூடக் கோரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தின்போது, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், துரதிருஷ்டவசமாக 13 நபர்கள் உயிரிழந்தது எனக்கு மிகவும் துயரமும், மனவேதனையும் அளித்தது.

22.5.2018 அன்று உயிரிழந்த நபர்களுக்கு தலா பத்து லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டேன். தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்புவதற்காக நியமிக்கப்பட்ட மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அங்கே சென்று உயிரிழந்த குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தோரை சந்தித்த போது, அவர்கள் நிவாரண நிதியுதவியை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர். அதன் அடிப்படையிலும், நிவாரண நிதியை உயர்த்தி வழங்க கோரும் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிக்குமாறு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை, 25.5.2018 அன்று உத்தரவிட்டுள்ளதையும், பல்வேறு தரப்பிலிருந்து அரசுக்கு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளையும், தமிழ்நாடு அரசு பரிசீலினைக்கு எடுத்துக் கொண்டது.

இதன் அடிப்படையில், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, 10 லட்சம் ரூபாய் நிவாரண உதவியை உயர்த்தி, **20 லட்சம் ரூபாய்** நிவாரண உதவி வழங்கவும், துப்பாக்கி சூட்டில் பலத்த காயமடைந்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 3 லட்சம் ரூபாயை, **5 லட்சம் ரூபாயாக** உயர்த்தியும், லேசான காயமடைந்தவர்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாயை, **ஒன்றரை லட்சம் ரூபாயாக** உயர்த்தியும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**